உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஹூ ஆவணி மீ 26 ஆம் உ
(1889)

பிரதி விலை: ரூபா 12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்
(HINDU ORGAN)

புத்தகம்: 112 | விஷு வருடம் மாசித் திங்கள் 15 ஆம் நாள் (27-02-2002) மாசிப் பூரணை | இதழ்: 11

## திருக்கேதீச்சர ஆலயத்திற்குச் செல்ல விதிக்கப்பட்டிருந்த
# கட்டுப்பாடுகள் நீக்கம்

### ஆலய சுற்றாடலிலிருந்து இராணுவம் முற்றாக விலகியது
### புனரமைப்புப் பணிகள் விரைவில் பூர்த்தியாகும்
## புத்தாண்டில் மகா கும்பாபிஷேகம்

**ஈழத்துச் சைவமக்களின் இருகண்களில் ஒன்றெனப் போற்றப்படும் தேவாரப் பதிகம் பெற்ற திருக்கேதீச்சரத் திருக்கோவிலுக்கு அடியார்கள் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டு விட்டன. ஆலய மடங்களிலும் சுற்றாடலிலும் முகாமிட்டிருந்த இராணுவம் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப் பட்டுவிட்டது. பன்னிரண்டு ஆண்டுகளாக நித்திய நைமித்திகங்களின்றிக் கிடந்த வேதனை தரு நிலை மாறி பிறக்கவிருக்கும் சித்திரபானு ஆண்டில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று திருக்கேதீச்சரத்தில் மீண்டும் சைவ மணம் கமழத் திருவருள் கூட்டியுள்ளது என்ற தித்திப்பான செய்தி சைவ உள்ளங்களில் மனவெழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட நிரந்தர யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவற்றின் விளைவாகவும் கௌரவ இந்து கலாசார அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவும் திருக்கேதீச்சர ஆலய சுற்றாடலிலிருந்து இராணுவம் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதுடன் ஆலயத்திற்குச் செல்ல விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு விட்டன.

பன்னிரண்டு ஆண்டுகளாக - 1990 ஆம் ஆண்டு முதல் - பூசைகள் விழாக்கள் நடைபெறாதிருந்தமையால், கோவிலின் முக்கிய பகுதிகள் புனரமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின்னரே பூசை, வழிபாடு, விழாக்கள் நிகழ்த்தப்பட முடியும். ஆலய திருப்பணிச்சபையினர், மன்னார் மாவட்டச் செயலக

(3ம் பக்கம் பார்க்க)

பாலாவியின் கரைமேல் திடமா உறை இன்றான்

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி அணிந்தகறைக் கண்டன்
படஏரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாஉறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

— சுந்தரர் (ஏழாந் திருமுறை)

உ

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - (15):

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(புத்தகம் 112, இதழ் 10 இன் தொடர்ச்சி)

## கந்தவன ஆலயப் பணிகள்:

வல்வெட்டித்துறைக்கு சமீபமாகவுள்ள பொலிகண்டி என்ற கிராமத்தில் அமைந்திருப்பது கந்தவனக் கடவைக் கந்தசுவாமி திருக்கோவில். பெரியாரின் பெற்றோர் கந்தவன நாதனை வேண்டித் தவமிருந்து அப்பெருமான் திருவருளால் பெரியாரைப் பெற்றெடுத்தனர். சைவப்பெரியாரும் கந்தவனநாதர் மேல் பேரன்பு பூண்டு தொண்டுகள் செய்து வழிபட்டு வந்தார். 1933 ஆம் ஆண்டில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் கந்தவனத்திலேயே ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். அந்த ஆச்சிரமம் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்.

கந்தவனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் அவர் காலை, மாலைவேளைகளில் கோவிலுக்குச் சென்று வழிபாடாற்றாது இருந்ததில்லை. கோவிலுக்குச் செல்லும் வழியிலோ அல்லது கோவிலுக்குள்ளோ அல்லது திரும்பிவரும் போதோ அல்லது திரும்பி வந்து திருவாசகம் படித்து முடிக்கு முன்போ எவரோடும் பேச மாட்டார்கள். கோவிலில் அலகிடும் திருத்தொண்டைத் தமது நித்திய கடமையாகக் கொண்டிருந்தார். அங்கு அலகிடும் பணி செய்து வந்த ஏழைத் தொண்டரொருவருக்கு மாதந்தோறும் பொருளுதவியும் செய்து வந்தார். நிர்மாலிய புஷ்பங்களை இரு கரங்களாலும் எடுத்துக் க்ண்ணில் ஒற்றித் தூரத்தே பயபக்தியோடு இடுவார்கள். பூசைக்குரிய திரவியங்களைத் தேவைப்பட்ட காலத்தே வழங்கப் பின்நிற்கார்.

தன் கைப்பொருள் கந்தவன நாதன் தன்னிடம் ஒப்படைத்த நம்பிக்கைச் சொத்து என்பதே அவருடைய எண்ணம். தமது பொருள் முழுவதையும் கந்தவன ஆலய சேவைக்குப் பெரும் நிதியாக்க வேண்டுமென்று விரும்பினார். கோவிலில் சமயகுரவர் நால்வருக்கும் ஆலயம் அமைத்து நால்வர் திருவுருவங்களைப் பிரதிட்டை செய்விப்பித்தார். சமய குரவர்களுக்கும் முருகப்பெருமானுக்கும் பூசைசெய்ய ஆயிரத்து அறுநூறு ரூபா அறக்கட்டளை ஏற்படுத்தி ஒரு சாசனம் எழுதியிருந்தார். ஆனால் அவர் உயிரோடு இருந்த காலத்திலேயே அவ்வறக் கட்டளை நடைபெற முடியாதபடி போயிற்று. அதனால் தமது பொருளையெல்லாம் திருக்கேதீச்சர ஆலயப் பணிக்குச் செலவிட்டார்.

## திருக்கேதீச்சரப் பணிகள்:

மூன்று நூற்றாண்டுகளாக திருக்கேதீச்சரம் என்ற திருப்பெயரையே ஈழத்து சைவமக்கள் மறந்திருந்தனர். அதன் பின் திருக்கேதீச்சரநாதனை இலங்கைச் சைவமக்களுக்கு நினைவூட்டிப் பிரசாரம் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆவார். திருக்கேதீச்சர ஆலயமமைந்திருந்த நாற்பது ஏக்கர் நிலத்தை அரசிடம் இருந்து பெறும் முயற்சி நாவலர் பெருமான் சிவபதமடைந்து பதினான்கு ஆண்டுகளின் பின் - 1893 ஆம் ஆண்டில் - நனவாகிற்று. சைவத் தொண்டர் திரு சித. மு. பசுபதிச் செட்டியார் அவர்கள் பெரும் பொருள் செலவுசெய்து மண் அகழ்வித்துப் பழைய சிவலாயம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்துக் கோவில் அமைத்து 28-06-1903 ஆம் நாள் கும்பாபிஷேகம் செய்வித்தார். 01-06-1903 முதல் கோவில் நித்திய பூசைகளை மாதம்பையில் வாழ்ந்த நாட்டுக்கோட்டை நகரத்து செட்டியார்கள் ஏற்று நடத்திவந்தனர். இவர்கள் மேலும் சில திருப்பணிகள் செய்வித்து 1910ஆம் ஆண்டில் இன்னுமொரு கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

1-3-1919முதல் கோவில் நிருவாகம் கொழும்பு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாட்டுக் கோட்டைச் செட்டிமாரால் பொறுப்பேற்கப்பட்டது.

பின்னர், காலப்போக்கில் நிர்வாகம் கொழும்பு பழைய, புதிய கதிரேசன் கோவில் நிர்வாகிகளைக்கு மாறியது. நித்திய பூசைகள் நடைபெற்று வந்ததாயினும் ஆலயத்தைப் பழைய உன்னத நிலைக்குக் கொண்டு வருதற்கேற்ற புனருத்தாரண வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை

கந்தவனக்கடவையில் இருந்த சைவப்பெரியார் திருக்கேதீச்சரத் திருப்பணிகளில் அக்கறை காட்டத் தொடங்கினார். அங்கு செல்பவர்கள் தங்குவதற்கு இடமில்லாததைப் பெருங்குறைபாடாகக் கண்ட சைவப் பெரியார், முதலியார் முத்துத்தம்பிப் பிள்ளை என்பவரது உதவியுடன் இரண்டறைகளைக் கொண்ட மடமொன்றைக் கட்டுவித்து அதற்குத் திருஞானசம்பந்தர் மடம் எனப் பெயர் சூட்டினார். இப்பெருஞ் சிவத்தலத்தில் நடராசப் பெருமானின் திருவுருவச் சிலை இல்லாதிருந்த குறையைப் போக்கத் தமது உபயமாக சிவகாமசுந்தரியம்பாள் சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தி சிலைகளைத் தாபித்தார்.

நடேசப் பெருமானின் கும்பாபிஷேக விழாவோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியும் இங்கு குறிப்பிடுதற்குரியது. கும்பாபிஷேகத்துக்கென நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குச் சில நாட்களின் முன்னதாக அவர் உடல் நலன் குன்றியிருந்தது. கும்பாபிஷேகக் கடமைகளை ஒழுங்கு செய்யும் பொறுப்பை வேறொருவரிடம் விட்டுவிட்டுக் கந்தவனத்திலேயிருந்தார். ஆனால் அவருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை, கும்பாபிஷேகம் காண முடியாததொரு வாழ்க்கை ஒரு வாழ்க்கையா, இந்த உடம்பைப் பேணுவதற்காக நான் இங்கு ஓய்வெடுப்பதா என அவர் மனம் அவரை உறுத்தியது. அப்பர் பெருமான் எவ்வளவு இடையூறுகளுக்கு மத்தியிலே கைலாயயாத்திரை செய்தார் என்பதை எண்ணினார். வருத்தமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டது.மறு நாட் காலையில் திருக்கேதீச்சரத்திலே நடராஜப் பெருமானின் கும்பாபிஷேகத்தை நேரிலேயே கண்டு களித்தார்.

இவ்வாறு திருக்கேதீச்சரப் பணிகளில் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தபோது சைவசீலர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் போன்ற பெரியார்களுடன் இணைந்து 19-10-1948 ஆம் நாள் திருக்கேதீச்சர ஆலய திருப்

(15ம் பக்கம் பார்க்க)

உரிமைப் போரில் ஒரு திருப்புமுனை:

## அரசு - விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை

## சர்வதேச சமூகம் வரவேற்பு

# சமாதான முயற்சிகள் வெற்றிபெறப் பிரார்த்திப்போம்

நிரந்தரப் போர் நிறுத்தத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்டுள்ளனர். இதன் மூலம் இரு தசாபதங்களாகப் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்த யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின் மூலம் நிரந்தர சமாதானத்திற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. இந்த அடித்தளத்தில நிரந்தர சமாதானம் என்ற மணிமண்டபம் கட்டியெழுப்பப்பட வேண்டியுள்ளது. தமிழ் மக்களின அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவொரு தீர்வை எட்ட இரு பகுதியினரும் கடுமையாக முயற்சிசெய்து பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும்.

இவ்வுடன்படிக்கை இந்நாட்டு வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையெனக் கருதப் படுகிறது. சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் இணக்கமானதொரு நிலையை எட்ட உதவிய நோர்வே நாட்டின் அனுசரணைப்பணி பாராட்டுதற்குரியது. இவ்வொப்பந்தத்தைச் சர்வதேச சமூகம் வரவேற்றிருப்பது அதற்கு வலுவைத் தருகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் இயல்பு நிலை படிப்படியாக ஏற்பட்டுவருவது கண்கூடு. இது விரைவுபடுத்தப்படவேண்டும். யாழ்-கண்டி வீதி மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்படவேண்டும். இப்பாதை திறப்பு இயல்பு நிலையை ஏற்படுத்தப் பெரிதும் உதவும்.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பெற்றால் மட்டுமே பரஸ்பர நம்பிக்கையும் நட்பு ரீதியான உண்மையான புரிந்துணர்வும் ஏற்பட்டு பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காணக் கூடியதாயிருக்கும்.

சமாதான முயற்சிகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு தமிழ் மக்கள் கௌரவமாக வாழக்கூடியவொரு சமாதான சூழ்நிலை விரைவில ஏற்படவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

## கட்டுப்பாடுகள் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரணையுடன் ஆலயத்தின் முக்கிய பகுதிகளைப் புனரமைத்து விட்டனர். மிகுதியாகவுள்ள பணிகளையும் பூர்த்தி செய்த பின்னர் மகாகும்பாபிஷேகம் நிகழும். இதற்கான ஏற்பாடுகளைத் திருப்பணிச்சபையினர் மேற்கொண்டுள்ளனர். மன்னார் மாவட்டஅரசாங்கசெயலகமும் இந்து கலாசார அமைச்சும் திருப்பணிச் சபையினருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவுள்ளனர்.

கோவிலுக்குச் செல்லும் முள்ளிப் பள்ளம் வீதியைப் புனரமைப்புச் செய்ய வடகிழக்கு மாகாணசபை முப்பது இலட்சரூபாவை ஒதுக்கியுள்ளது. ஆலய புனருத்தாரண வேலைகளைத் துரிதமாக நிறைவு செய்ய இந்து கலாசார அமைச்சு முப்பத்தைந்து இலட்ச ரூபாவைத் திருப்பணிச்சபைக்கு வழங்கியுள்ளது.

இதே சமயம் எதிர்வரும் மகா சிவராத்திரி (12-03-2002 ஆம் திகதி) யை முன்னிட்டு, ஆலயத்திற்குப் பக்தர்கள் சென்று பிரார்த்தனைகளில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்துசமய விவகார அமைச்சு, இந்து சமய கலாசார திணைக்களம், ஆலய திருப்பணிச் சபை, மன்னார் மாவட்ட செயலகம் ஆகியன கூட்டாக முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. ஆலயத்தில் அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற மாட்டாதாயினும், அப்புனிதத்தலத்தில் தங்கியிருந்து பிரார்த்தனை செய்ய பல அடியார்கள் விரும்புவராதலாலேயே இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

## முழுமுதற் கடவுள்

சிவபெருமானே முழுமுதற் கடவுள். ஆதலின் சிவனை வழிபடும் மெய்நெறியாகிய சைவசமயமே மெய்ச் சமயம். அதுவே மேலான சமயமுமாகும். இவ்வுண்மையைச் சைவசமயிகள் நன்குணரவேண்டும்.

**"பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி. பதி ஒருவரே;
அந்தப் பதி சிவபெருமான்"**

"சிவபெருமானின் வேறாகாத திருவருளே சிவசக்தி; அந்தச் சிவசக்தியே பார்வதி தேவியார் என்று சொல்லப்படும். சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்கள்: விநாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள். இவர்களுக்குச் செய்யும் வணக்கம் சிவபெருமான் ஒருவரைக் குறித்த வணக்கமேயாம்"

— ஆறுமுகநாவலர்

உ

# திருவுருவ வழிபாடு

— பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் —

(புத்தகம் 112, இதழ் 10 இன் தொடர்ச்சி)

கணிதம் பயிலும் ஒருவன், குறியீடுகள் மூலமே தனது கணித அறிவை வளர்க்கின்றான். குறியீடுகள் மூலமாக வளர்த்த கணித அறிவைக் கொண்டு பலதரப்பட்ட படிகளை ஒவ்வொன்றாகக் கடந்து, கற்பனைக் கோட்டையாக எண்ணிவந்த சந்திர மண்டலம்வரை மனிதன் போய்விட்டான். இது பற்றிக் கற்பனை கட்டு முன்—இம்முடிபை யாருங் கண்ணாற் கண்டதில்லை. ஆனால் கற்பனையையே உண்மையாகக் காணுகிற நிலை கைகூடியபொழுது உலகமே அதிசயித்து உண்மையை உணர்ந்தது. இவ்வுண்மையின் அந்தத்தைக் காட்டப் பேருதவியாக விளங்கியவை கணிதக் குறியீடுகளேயாம். இது பற்றித் திடமானவொரு முடிவு காண்பதற்குமுன் நல்லநுகூலமான விளைவை நல்க உதவி வந்த கணிதக் குறியீடுகளைப் பொய்யென்று வாதிடவோ அன்றிச் சொல்லவோ முடியுமா? முடியாது. புறக்கண் கொண்டு நாம் காணுந் திடமான உண்மை இதுவாகும்.

இதுபோலவே ஆன்மிக உலகில் அகக்கண் கொண்டு காண வேண்டிய இறைவனைக் காட்டும் ஆரம்ப நிலைக் குறியீடாக - அடையாளமாக - விளங்குவது எமது ஆலயத் திருவுருவங்களும், அவற்றிற்காற்றும் வழிபாடுகளுமாகும். இவற்றின் இறுதி முடிவான நிலை பரம்பொருட்காட்சியான சிவாநுபவம். கணித சாத்திரத்தில் குறியீடுகள் பொருள் அல்ல; அவை உணர்த்துகின்ற இயற்கை உண்மைகளே பொருளாம். அதுபோலத் திருவுருவ வழிபாட்டிலும் திருவுருவம் பொருளன்று; அது குறியீடாக நின்று காட்டும் பேருண்மையே - எண்ணமே - பொருள். திருவுருவ வழிபாட்டால் தங்கள் எண்ணத்தை நிறைவு செய்து இறைவனின் பேருண்மையைக் காட்டிச் சிவாநுபவப் பேறு பெற்றோர் எமது சமயத்தில் பலராவர். மார்க்கண்டேயர் போன்றவர் வாழ்க்கை வரலாறு இதற்குச் சான்றாகும்.

இன்னும், எமது சமய குரவர்கள் அறுபத்து மூவர்களுள் முப்பது பேர் திருவுருவ வழிபாட்டால் வீடு பெற்றோராவர். அவர்களுள் எறிபத்தர், கலயர், முருகர், கண்ணப்பர், ஆனாயர், சண்டேசுவரர், திருநாளைப்போவார், சேரமான் பெருமாள், சாக்கியர், தண்டியடிகள், பூசலார், கணம்புல்லர், புகழ்ச்சோழர், ஐயடிகள், காடவர்கோன் போன்றோர் குறிப்பிடத்தக்க சிலராவர்.

நாம் திருவுருவ வழிபாடு செய்கிறோம் என்றால், அவ்வழிபாடு நம் உள்ளத்திலிருந்து எழுந்து காணும் உருவத்தையும் கடந்து, அறிய முடியாத ஒரு பொருளைச் சென்று பற்றுகிறது என்பதை நாம் பூரணமாக நம்பி உணருதல் வேண்டும். இன்னும் திருவுருவத்தில் இறைவன் எழுந்தருளி இருப்பதாய் ஆரம்ப முதல் நினைந்து வழிபாடாற்றி வரவரத் திருவுருவமே இறைவனாயும், அதன்மேல் திருவுருவத்தைக் காணாது இறைவனையே அங்கு நேருக்கு நேராகக் காணுவதாகவும் அநுபவம் பிறக்கும் என்பதும் தெளிவாம்.

உருவ வழிபாட்டில் பலருடைய மனங்கள் - பார்வைகள் ஒருங்கு வந்து ஒரே பொருளில் குவிகின்றன. பலருடைய தூய சிந்தையிலிருந்து பிறக்கும் எண்ணங்கள் குவிந்து ஒருமுகப்படும் போது ''எண்ணத்திற்கு ஆற்றல் உண்டு'' என்று கூறுவதற்கு இசைய, அது பதியும் இடத்தில் தெய்வ சாந்நித்திய ஆற்றல் பிறக்கும்.

அவ்வாற்றல், அதனை நோக்கி வழிபடுவோரைத் தன்வயப்படுத்தித் தெளிந்த நல்லறிவூட்டும்; நன்மை பெருக நல்வாழ்வு பெறவுஞ் செய்யும். அப்படியானவர்களது உண்மையறிவால் வந்த அநுபோகப் பெருக்கில் கருவாகிப் பிறந்தவையே எமது சைவ சமயக் கருவூலங்களாகிய தோத்திர சாத்திர நூல்களாவன.

இவ்வாறு பக்தியுடையவர் கிரியையில்லாது சிலையில் வணக்கஞ் செய்வதையும், அவர் மனம் அச்சிலையில் தெய்வம் இருக்கிறதென்று கருதுவதும், எங்கும் நிறைந்த இறைவன் அச்சிலையில் காட்சியாவதையும் உணர்த்துவதே தோத்திர நூலாகிய தேவாரத்தில், அப்பர் பெருமானது திருவாரூர்த் திருத்தாண்டகப் பதிகத்தில் வரும ''உயிராவண மிருந்து உற்றுநோக்கி உள்ளக் கிழியி னுருவெழுதி'' என்ற பாடலாகும். (உள்ளக்கிழி - மனமாகிய படம் வரையுஞ் சீலை.) சரியை, கிரியை, யோகம் ஆகிய முத்திற நெறியாளர்களுக்கும் திருவுருவ வழிபாடு உரியதாகும். இதனை வலியுறுத்துகின்றது சைவ சாத்திர நூலாகிய சிவஞான சித்தியார்ப் பாடல் ஒன்று.

''திருக்கோயி லுள்ளிருக்குந் திரு
மேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவனுறைவா னங்கே
உருக்கோலி மந்திரத்தா லென
நினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென்
பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தி
னெரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்
சுரப்பிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பால்
முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டரு
ளுவனன் பர்க்கே''

என்பதே அப்பாடலாகும். (இந்தனம் = விறகு)

ஆலயத்திலுள்ள திருவுருவச் சிலை, விக்கிரகம், பிம்பம், மூர்த்தி, பேரம், பிரதிமை போன்ற பல்வேறு சொற்களால் சிற்ப நூல்களில் குறிப்பிடப்படும். இவற்றுள் ''விக்கிரகம்'' என்ற சொல்லில் வரும் ''வி'' ''விசேடம்'' என்றும், ''கிரகம்'' ''இடம்'' என்றும் பொருள்படும். அஃதாவது கடவுள் விசேடமாக விளங்கும் இடம் என்பது பொருளாம். அண்டம் முழுவதிலும் பொதுவாக வியாபகமுடைய இறைவன், ஆலயங்களில் விசேடமாகவும், அதிலும் விக்கிரகங்களில் பின்னும் அதி விசேடமாகவும் விளங்குவான் எனச் சமய நூல்கள் கூறுகின்றன.

ஆலயங்களில் கல்லினால் அல்லது தாமிரத்தால் (உலோகத்தால்) செய்யப்பட்ட திருவுருவச் சிலைகள் வைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். கல்லாலமைந்தவை கற்சிலை அல்லது சிலாவிக்கிரகம் எனப்படும். இவை ஒவ்வொன்றும் ஆகம முறையில் அமைந்த அவற்றிற்குரிய கருவறைகளில் பிர

(11ம் பக்கம் பார்க்க)

# சைவபரிபாலன சபை
## தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் - 18

(புத்தகம் 112, இதழ் 10 இன் தொடர்ச்சி)

### பரிசுகள்:

இந்துக்கல்லூரியிலிருந்து 1896 பெப்ரவரியில் நடைபெற்ற கல்கத்தா புகுமுகத் தேர்வில் தோற்றியவர்களுள் முதலாம் பிரிவில் திரு. அ. விசுவநாதன், திரு. சி. சுப்பையா என்றஇருவரும் முதலாம் பிரிவிற் சித்தியடைந்ததை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவர்களுள் திரு. விசுவநாதன் ஆங்கிலமொழியிலும் திரு. சுப்பையா கணிதத்திலும் முதற்தரமான மாணவர்கள் எனக் காணப்பட்டதால், குமாரசுவாமி பரிசு எண்பது ரூபா திரு விசுவநாதனுக்கும் நமசிவாய முதலியார் பரிசு எண்பது ரூபா திரு சுப்பையாவுக்கும் வழங்கப்பட்டது.

குருமார் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்த மாணவர்களுள், தமிழ்ப் பாஷையில் திரு. க. சதாசிவஐயரும் சமய நூலுணர்ச்சியில் திரு. அ. இளையதம்பியும் முதற்தர மாணவர்களெனக் காணப்பட்டு, இவர்களொவ்வொருவருக்கும் நாற்பது ரூபா பொன்னம்பலவாணர் பரிசு ஆக வழங்கப்பட்டது.

### இந்துசாதனம் முகாமையாளர், பத்திராதிபர் நியமனம்:

இந்துசாதனம் பத்திரிகையின் முதற் கௌரவ பத்திராதிபராகவும் முகாமையாளராகவும் கடமையாற்றி வந்த திரு த கைலாசபிள்ளை அவர்கள் 1896 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் இப்பதவிகளிலிருந்து விலகிக் கொண்டார். 1896 ஆம் ஆண்டு புரட்டாதி மாத முதல் அப்பதவிகளுக்கு திரு பெ. கார்த்திகேசபிள்ளை என்பவர் நியமிக்கப்பட்டார்.

### விவேகானந்த சுவாமிகள் யாழ்ப்பாண விஜயம்:

1897 ஆம் ஆண்டு தைமாதம் பதினேழாம் திகதி கூடிய சைவபரிபாலனசபையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் "ஸ்ரீ விவேகானந்த சுவாமி அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைக்க வேண்டுமென்றும் அதற்காக ஒரு கூட்டம் கூட்டிப் பணம் சேர்த்தல் வேண்டுமென்றும், அப்படிச் சேர்க்கப்படும் பணம் போதாதிருந்தால், சபைப் பணத்திலிருந்து இருநூற்றைம்பது ரூபாவுக்குக் கூடாத ஒரு தொகையை இதற்காகச் செலவழிக்கலாம் எனவும்" தீர்மானிக்கப்பட்டது.

விவேகானந்த சுவாமிகளை அழைத்து உபசரிப்பதற்குப் பொருள் சேகரிப்பதற்காக இந்துக் கல்லூரி மண்டபத்தில் 1897 ஆம் ஆண்டு தை மாதம் பத்தொன்பதாம் திகதி ஒரு பொதுச்சபை கூட்டினார்கள். அச்சபையில் 750 ரூபா வரையில் சேர்ந்தது. "விவேகானந்தசுவாமிகள் உபசரணைச்சபை" என்னும் பெயரோடு ஒரு சபையை நிறுவி அதற்கு நியாயதுரந்தரர் சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களைத் தலைவராகவும், திரு. அ. சபாபதி அவர்களைச் செயலாளராகவும் சித. மு. பசுபதிச் செட்டியார் அவர்களை உபதலைவராகவும், சட்டத்தரணி எஸ். பொன்னம்பலம், L. P. இராமசாமிச்செட்டியார் என்னும் இருவரும் பொருளாளர்களாகவும், நியாயதுரந்தரர் அ. கனகசபை முதலான அநேக பெரியோர்கள் அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் விவேகானந்த சுவாமியை அழைத்து உபசரித்தார்கள்.

சுவாமிகள் கொழும்பிலிருந்து கண்டி, அனுராதபுரம், வவுனியா வழியாக மிகவும் மோசமான பாதைகளூடு சிரமத்துடன் பயணித்து யாழ்ப்பாணத்தை 1897 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி முற்பகல் 11-30 மணியளவில் வந்தடைந்தார்.

இவை குறித்து 1897ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி வெளியான Hindu Organ இல் பின்வரும் செய்தி வெளியாகியிருந்தது.

### The Visit of Swami Vivekananda to Jaffna

"Sunday the 24th ultimo will be ever remembered by the Hindus of Jaffna as the day of Swami Vivekananda's arrival here from Colombo by land. It was arranged by the Reception Committee that the Swami was to be received privately at Upar on Sunday morning by a deputation of seven members and taken to the residence prepared for him in the Town and that the public demonstration in his honour should be reserved for the evening. But it was found that about one hundred persons composed of the elite of the Hindu society were collected at Upar anxiously awaiting the arrival of Swami Vivekananda On Sunday morning till 9 a. m. the coach with the Swami and party did not make the appearance. It was then resolved to go ahead another five miles and wait at Chavakachcheri No sooner had the place been reached the Swami and party consisting of Swami Nirtiananda, Captain and Mrs. Sevier, Mrs. Goodwin and Mr. Harrison arrived by the mail coach. A procession was then formed to go to the Town, with Swami Vivekananda, Swami Nirtja-nanda and Mr. Advocate Nagali-ngam in the first carriage - a landau - drawn by a pair, and the rest following in the twenty carriages. There were among those who received the Swami at Chava-kachcheri and escorted him to the town, Advocates Nagalingam and Kanagasabai, Proctors Casipillai Ponnampalam and Cathiravelu, Messrs A. Mailvaganam, Illankai-nayaga Mudr, R. Kandyah, Renter Vytilingam, Gate Mudr. Tillainadar T. Kailasapillai, A. Muttutamby Pillai, A. Sabapathy, K. Mudr Navaratnam, K. Sabapathy Chettiar, S. Naganader, A. Muttyah, R. M. Ar. Ar. Suppiramanian Chetty, L. P. Ramasamy Chetty and M. Chinnappa. It was 11-30 a m when the procession reached the town by the Central Road. The Swami and the Party were accomo-dated there at a decent house

(10 ம் பக்கம் பார்க்க)

உ

# மகேசுர வடிவங்கள்

உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவபெருமானுக்கு உரிய வடிவங்கள் அருவம், அருவுருவம், உருவம் என மூன்று வகைப்படும். அருவத் திருமேனியுடையபொழுது சிவபெருமான் சிவன் எனவும் அருவுருவத்திருமேனியுடையபொழுது சதாசிவன் எனவும் உருவத்திருமேனியுடையபொழுது மகேசுரன் எனவும் பெயர் பெறுவர்.

சிவபெருமானுடைய திருவடிவங்களான மகேசுர வடிவங்கள் பல வகைப்படும். ஆன்மாக்கள் செய்யும் தியானம், பூசை முதலியவைகளின் பொருட்டுச் சிவசத்தியாகிய திருவருட் குணங்களுள், இன்ன இன்ன குணங்களை இன்ன இன்ன அவயவம் குறிக்கிறது என்ற விளக்கங்களுடனும் உட்கருத்துக்களுடனும் கூடிய பாவனையாக எழுந்தவை சில வடிவங்கள். சிவபெருமான் அடியவர்கட்கு அருள் செய்யுமாறு அவர்கள் மனோபாவனைக்கேற்ற திருவுருவங்களையும் கொண்டருளுவர். புராணங்களில் அடியவர்களுக்கு அருள் செய்யுமாறு சிவபெருமான் மேற்கொண்ட பல திருவருட் செய்கைகள் கூறப்பட்டுள்ளன அத்திருவருட் செய்கைக்கு ஏற்றதாக அமைந்தவை வேறு சில திருவடிவங்கள்.

இவ்வாறு அடியவர்களது மனோபாவனைக்கேற்பவும் சிவபெருமானது திருவருட் செய்கைகளைக் காட்டுவனவுமாக மகேசுர வடிவங்கள் பல வகையாயுள்ளன.

**''போகியாய் இருந்து உயிர்க்குப்**
**போகத்தைப் புரிதல் ஓரார்**
**யோகியாய் யோக முத்தி**
**உதவுதல் அதுவும் ஓரார்**
**வேகியா னாற்போல் செய்த**
**வினையினை வீட்டல் ஓரார்**
**ஊகியா மூட ரெல்லாம் உம்பரில்**
**ஒருவன் என்பார்''**

என்ற சிவஞானசித்தியார் சுபக்கப் பாடலின்படி இவையாவும் சிவபெருமான் கொண்ட வெவ்வேறு திருமேனிகளேயன்றி, அவை வெவ்வேறு தேவர்களைக் குறிப்பனவல்ல.

உயிர்களுக்குப் போகம் நல்குதற் பொருட்டுக் கொண்ட திருமேனிகள் போகவடிவங்கள் எனப்படும். கோபங் கொண்டவன் போல் உயிர்களைத் தண்டித்து அவைகளின் வினையினைக் கெடுத்தற் பொருட்டுக் கொண்ட திருமேனிகள் கோரவடிவங்கள் எனப்படும். யோக சாதனை மூலம் உயிர்கள் முத்தியடைய உதவுதற் பொருட்டுக் கொண்ட திருமேனிகள் யோகவடிவங்கள் எனப்படும்.

இவ்வாறே திருமேனிகள் குறிக்கும் குணங்களுக்கு ஒப்ப இத்திருமேனிகளை சாந்த (அனுக்கிரக) மூர்த்தங்கள், அகோர மூர்த்தங்கள், ஐக்கிய மூர்த்தங்கள் எனவும் வகைப்படுத்துவர். இங்கு ஐக்கிய மூர்த்தங்கள் என்பது அர்த்தநாரீஸ்வரர், ஹரிஹரர் (சங்கரநாராயணன்) போன்ற மூர்த்தங்களைக் குறிக்கும்.

மகேசுவரரது இருபத்தைந்து உருவ பேதங்கள் சைவாகம புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

அவை:

சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூரர், சபாபதி (நடராசர்), கல்யாணசுந்தரர், பிட்சாடணர், காமாரி, காலாரி, திரிபுராரீ, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசினர், தட்சிணாமூர்த்தி, லிங்கோற்பவர்.

சிவபெருமானது அருளுருவத் திருமேனியிலே தோன்றிய குணங்களும் ஆயுதங்களும் தொழில்களுமாகிய எல்லாம் அருள் வடிவங்களேயாம். சிவவடிவத்திற்குச் சிறப்பாகக் கூறப்பட்ட அங்கங்கள் முக்கண் (திரிநேத்திரம்) நான்கு கைகள் (சதுர்ப்புஜம்), சடாமகுடம் என்பனவாம்.

ஆபரணங்கள் புலித்தோல், முப்புரிநூல் (உபவீதம்), ஹாரம் (கழுத்தில் அணியும் ஆபரணம்), கேயூரம் (புயத்தில் அணியும் தட்டையான ஆபரணம்) குண்டலம், (காதணிகள்) பாம்பு (சர்ப்பம்) என்பனவாம்.

ஒளி, வாழ்வு, வெப்பம் ஆகிய மூன்றுக்கும் மூலமான சூரியன், சந்திரன், தீ (நெருப்பு) ஆகிய மூன்றும் சிவனது முக்கண்களாக உருவகப்படுத்தப்படுகின்றன. மூன்றாவது கண் ஞானக்கண் என்பதைக் குறிப்பதாகவும் கொள்வர். அதாவது சிவபெருமான் எல்லாம் அறிந்தவர் என்பதைக் குறிக்கும்.

அப்பாவி மிருகங்களை ஈவிரக்கமின்றிக் கொன்று விழுங்கும் கொடிய மிருகம் புலி. மனநிறைவை ஒரு போதும் ஏற்படுத்தாது மனிதர்களை விழுங்குவது ஆசை. ஆகவே ஆசையைப் புலிக்கு ஒப்பிடலாம். புலியைக்கொன்று புலித்தோலை ஆடையாக அணிந்திருப்பது, சிவபெருமான் ஆசைகளை முற்றாக வென்றவர் என்பதைக் குறிக்கும்.

யானை சக்தி வாய்ந்த மிருகம், அதன் தோலைப் போர்த்திருப்பது, சகல மிருகக்குணங்களையும் முற்றாக அடக்கி வைத்திருப்பவர் என்பதைக் குறிக்கும்.

எமக்கு மரணத்தைக் குறிக்கும் விஷப்பாம்புகள் சிவபெருமானுக்கு அழகூட்டும் ஆபரணங்களாயமைகின்றன. மரணத்தின் குறியை அலங்காரமாகப் பூண்டிருக்கும் சிவனால் மட்டும் தான உலகங்களைக் காப்பாற்ற ஆலகாலம் விஷம் போன்ற பயங்கர விஷத்தை விழுங்க முடியும். இவை சிவபெருமான் மரணத்தை வென்றவர்என்பதைக் குறிக்கிறது.

திருக்கரங்களின் சூலம், மான், மழு, வாள், வச்சிராயுதம் (குலிசம், வைரப்படை), நாகம், பாசம், அங்குசம், கண்டாமணி, அக்கினி (தீ) போன்றவற்றைத் தரித்திருப்பார்.

சூலமானது சிவபெருமானது ஐந்தொழில்களை மூன்று பெரும் பிரிவுகளாகச் சுருக்கிக்காணும் தத்துவத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படும். இவ்வாறு முத்தொழிலாகக் கருதும் போது படைத்தல் ஒருதொழிலாகவும் காத்தலும் மறைத்தலும் ஒரு தொழிலாகவும் அழித்தலும் அருளலும் ஒரு தொழிலாகவும் கொள்ளப்படும். இம் மூன்று தொழில்களையும் இயற்றுஞ் சக்திகள் முறையே செநநி, உரோதயித்திரி, ஆரணி என அழைக்கப்படும். திரிசூலமானது இம்மூன்று சக்திகளையும் குறிக்கிறது. திரிசூலம் முக்குணங்களைக் குறிப்பதாக வியாக்கியானம் செய்யப்படுவதுமுண்டு. ஆகவே சிவனை முக்குணத்தின் தலைவன் எனவும் அவனிலிருந்தே பிரபஞ்சத் தொழிற்பாடு அனைத்தும் செயற்படுகிறது என்பதும் திரிசூலத்தைத் தாங்குவது மூலம் தெளிவாகக் குறிக்கப்படுகிறது.

(7ம் பக்கம் பார்க்க)

# மகேசுர வடிவங்கள்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

மான் அசுத்தமாயையும் நாகம் சுத்தமாயையும் மழு சத்தியத்தையும் வாள் ஞானத்தையும் வச்சிராயுதம் பிறிதெவற்றாலும் தடுமாற்றத்நுக் குட்படுத்த முடியாத (பேதிக்கப் படாத) இயல்பையும் பாசம் (ஐந்து) இந்திரியங்களைக் கட்டுப்படுத்துதலையும் அங்குசம் மதயானை போன்ற உணர்ச்சிகளையும் விருப்புகளையும் கட்டுப்படுத்துதலையும் கண்டாமணி சுத்த நாதத்தையும் அக்கினி மலங்களை எரிப்பவரென்பதையும் குறிக்குமென சைவ சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சிவ மூர்த்தங்களின் பொதுவான குறிகளின் இயல்புகளை மேலே காட்டினோம். இனி, இருபத்தைந்து உருவபேதங்களும் சுட்டி நிற்கும் விசேட திருவருட் குணங்களை அல்லது திருவருட் செய்கைகளைச் சுருக்கமாக நோக்குவோம்.

## சந்திரசேகரர்

சிவபெருமானது சாந்த (அனுக் கிரக) மூர்த்தங்களுள் ஒன்று சந்திரசேகர மூர்த்தம். சந்திரசேகர மூர்த்தங்கள் நிற்குந் திருக்கோலம் உடையனவாய், சந்திரனைத் தலையிற் தாங்கினவாய்க் காணப்படும் சந்திரசேகரர் என்பது சடையில் சந்திரனைத் தாங்கியவர் எனப் பொருள் படும்

கலைகள் தேய்ந்து வருந்திய சந்திரனுக்கு அபயம் கொடுத்த கோலம் தான் சந்திரசேகர வடிவம். ''வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல'' என்ற வள்ளுவர் வாக்குப்படி, இறைவனை அடைந்தவர்க்குத் துன்பமே இல்லை என்பதை இம் மூர்த்தம் குறிக்கிறது. ''வருந்துபவர்க் கெல்லாம் நானே புகலிடம்'' என இவ்வடிவம் காட்டி நிற்கிறது:

சிவனை அடைக்கலமாகக் கொண்டவர்க்கு ''அஞ்சுவது யாதொன்றும இல்லை; அஞ்சவருவதுமில்லை'' என்பதை சந்திரசேகரர் சடையிலணிந்துள்ள சந்திரனும் பாம்பும் காட்டும். ''பாம்பொடுதிங்கள் பகைதீர்த்தாண்டாய்'' எனத் தேவாரம் கூறுகிறது. சந்திரன் அமிர்தம்; பாம்பு நஞ்சு. இறைவனுக்கு இரண்டுஞ் சமம் அவனுக்கு விருப்பு வெறுப்பு இல்லை என்பதை அவன் இவையிரண்டையும் அணிந்திருக்கும் சந்திரசேகர மூர்த்தம் எமக்கு உணர்த்துகிறது.

தன் இயல்பும் குன்றி புகழும் இழக்கும் நிலையில் இருந்த சந்திரனைத் தன் முடிமேல் ஏற்று மீளவும் வாழ்வும் புகழும் அளித்த சிவபெருமானின் கருணையை சிவனருட் செல்வர்கள் யாவருமே போற்றிப்பாடியுள்ளார்கள். அப்பரடிகளுக்கு திருவையாற்றில் திருகைலாயக் காட்சியைக் காட்டியருளியபோது பாடியருளிய ''மாதர் பிறைக் கண்ணியானை'' என்று தொடங்கும் திருப்பதிகத்தின் ஒவ்வொரு திருப்பாடலிலும் இதனைச் சிறப்பித்துள்ளார். மாதர் பிறைக் கண்ணியானை, போழிளங் கண்ணியினானை, எரிப்பிறைக் கண்ணியினானை, பிறையிளங் கண்ணியினானை. ஏடு மதிக் கண்ணியினானை, தண் மதிக்கண்ணியினானை, கடி மதிக் கண்ணியினானை, விரும்பு மதிக் கண்ணியினானை, முற்பிறைக் கண்ணியினானை, திங்கள் மதிக் கண்ணியினானை, வளர் மதிக் கண்ணியினானை என்பன அப்பதிகத்திலுள்ள அப்பர் திருவாக்குகள். சமண சமயத்தில் புகுந்த தமக்கு மீண்டும் வாழ்வும் புகழும் அளித்த கருணைச் செயல், திருக்கைலாயக் காட்சியைக் கண்டபோது அப்பருக்கு உள்ளக் கிளர்வை ஏற்படுத்தியமை சந்திரனைச் சடையிற் தாங்கிய அருட் செயலுக்கு அவர் முக்கியத்துவம் கொடுத்து இப்பதிகத்தை அருளிச் செய்தமை காட்டுகிறது.

இறைவன் பிறைத்திங்களைத் தன் சடையில் அணிந்தது அவன் தன்னை அடைக்கலம் அடைந்தோருக்கு எல்லா நலன்களையும் அளிப்பான் என்பதைத் தான் உணர்த்துகிறது இதைக் கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தில்,

''நெற்றியங் கண்ணுடை நிமலந்து எம்பிரான்
உற்றவர்க்கு அருள் புரிகின்ற உண்மையைத்
தெற்றென உணர்தல் போல் திங்களின் கலை
கற்றையஞ் சடைமிசைக்க வின்று பூத்ததே''

என அழகாகக் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தப் பெருமான் தமக்கு ஞானப்பால் ஊட்டி ஆட்கொண்ட இறைவனைத் தம் தந்தைக்குச் சுட்டிக்காட்டும் முதற் தேவாரமாகிய ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கும் தேவாரத்தில் இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களையும் குறிப்பிடுகிறார் அத்தேவாரத்தில் தூவெண் ''மதிசூ'' என்பது காத்தல் தொழிலைச் சுட்டிக் காட்டுகிறது.

சந்திரசேகர மூர்த்தம் மூன்று விதமென ஆகமங்கள் கூறுகின்றன. அவை கேவல மூர்த்தி, உமாசகித மூர்த்தி, ஆலிங்கன மூர்த்தி எனப்படும கேவல சந்திரசேகர மூர்த்தியின் பக்கலில் சக்தியின் (உமையின்) வடிவம் அமைந்திராது நான்கு திருக்கரங்களுடன் விளங்கும் கேவல மூர்த்தியின் முன்வலக்கை அபய முத்திரையையும், முன்இடக்கை வரத முத்திரையையும் காட்டி நிற்கும். மற்றைய வலக்கையில் மழுவும் இடக்கையில் மானும் விளங்கும். இம்மூர்த்தியில் வளைவு சிறிதளவுமின்றி உடல் சமநிலையில் அமையும். இந்நிலையைச் சிற்ப நூல்கள் சமபங்கம் எனக்கூறும். சடாமுடியைப் புனைந்த தலைக்கோலம் உருவிற்குத் தனியழகு கொடுக்கும். இம்முடியில் பிறைச் சந்திரன் கவிந்து துலங்குவான். சந்திரசேகரர் நிற்கும் சமபங்க நிலை இராசத குணம் நிறைந்து நிற்றலைக் காட்டும். கேவல சந்திர சேகரரைப் பத்ம பீடத்தில் (தாமரை ஆசனத்தில்) நிற்கும் நிலையில் அமைத்தல் வேண்டும்.

மேற்கண்ட முறைப்படி சமபங்க நிலையில் தனிப்பீடத்திலோ அல்லது ஒரே பீடத்திலோ உமையுடன் நிறுவப்படும் பொழுது இம்மூர்த்தி உமாசகித சந்திரசேகர மூர்த்தி என நாமம் பெறுவர்.

உமையை ஒரு இடது கரத்தினால் ஆலிங்கனம் செய்த நிலையில் (தழுவிய நிலையில்) திருவுருவம் அமையும் போது அது ஆலிங்கன சந்திரசேகரமூர்த்தி என அழைக்கப்படும்.

மூவகையாகக் கூறப்பட்ட சந்திரசேகர மூர்த்தியின் இரண்டாவது வகையான உமாசகித சந்திரசேகர மூர்த்தமே இலங்கையிலும் தமிழ்நாட்டிலுமுள்ள கோவில்களில் நிறுவப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

(அடுத்த இதழில் தொடரும்)

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விஷு மாசி 15 (27.02.2002)

## நாவலர் பாடசாலை

தமிழ்க் கல்வி மரபில் நாவலர் பெருமான் ஏற்படுத்திய செழுமை மிக்க மாற்றங்களின் சின்னமாக விளங்கியதும் இன்று யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் என அழைக்கப்படுவதுமான யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை, 1998 ஆம் ஆண்டில் நூற்றியைம்பது அகவையைப் பூர்த்தி செய்ததை நினைவு கூர்ந்து, இவ் வித்தியாசாலைச் சமூகத்தினரும் நாவலர் தர்மகர்த்தா சபையினரும் இணைந்து சமீபத்தில் விழாக்கொண்டாடினர்.

இச் சந்தர்ப்பத்தில் நாவலர் பெருமானின் கல்விபற்றிய இலட்சியங்கள் என்ன? அவ்விலட்சியங்களை அடைய நாவலர் பாடசாலையையும் அதன் சொத்துக்களையும் எவ்வாறு பயன்தரு முறையில் உபயோகப்படுத்தலாம் என்பவை பற்றிச் சிந்தித்து அவற்றைத் திரிகரண சுத்தியுடனும் ஒற்றுமையாகவும் செயற்படுத்த முழுமுயற்சி செய்வது விரும்பத்தக்கது.

சைவத்தமிழ் மக்கள் உலகியல்நெறி, சமயநெறி இரண்டிலும் மேன்மையடைய வேண்டும் என்பதே நாவலரின் இலட்சியம். இதற்குக் கல்வியே சாதனம் என்பது அவரது அசைக்கமுடியாத நம்பிக்கை. மிஷனரிமார்களின் கல்விச் சேவையால் யாழ்ப்பாணச் சமூகம் பெற்ற அனுகூலங்களை மதித்த நாவலர், அவர்கள் கல்வியை மதமாற்ற முயற்சிகளுக்கு ஊடகமாக உபயோகித்ததையே எதிர்த்தார். கிறிஸ்து சமயத்தினர் தமது சமயத்தை வளர்க்கக் கல்வியையொரு ஊடகமாகப் பயன்படுத்தியதைப் போலவே நாவலரும் கல்வியைச் சைவ சமயத்தை வளர்க்கும் ஒரு ஊடகமாகப் பயன்படுத்த முடிவு செய்தார்.

தமது பிள்ளைப் பராயத்தில் நிலவிய திண்ணைக் கல்வி மரபையும், கிறிஸ்தவ மிஷனரிகளால் இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட மேலைநாட்டுக் கல்வி மரபையும் அனுபவவாயிலாக நன்கு அறிந்திருந்த நாவலர் பெருமான், இரு மரபிலும் கண்ட சிறப்பம்சங்களை உள்வாங்கி, தமிழ்க்கல்வி மரபைச் செழுமைப்படுத்தி - அம்மரபிலே சைவத் தமிழ்ச் சமூகம் கல்விகற்று முன்னிலை அடைய வேண்டும் என்ற இலட்சியத்துடனே வண்ணார்பண்ணையில் தமது முதலாவது சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தோற்றுவித்தார். பின் சிதம்பரத்திலும் அது போன்றவொரு பாடசாலையை அமைத்ததுடன், யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் சைவப் பிரகாச வித்தியாசாலைகள் உருவாகத் தூண்டுகோலாகவுமிருந்தார்.

சமயக் கல்வியுடன் தொழிற் கல்வியையும் சைவமாணவர்கள் சைவ சூழலில் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே நாவலர் கொள்கையாக இருந்தது. தொழில் வாய்ப்புகளுக்காக ஆங்கிலமொழி மூலக் கல்வியையே பெற்றோரும் மாணவரும் விரும்பியபோது, ஆறுமுக நாவலர் அவர்கள், தமது சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஒரு பகுதியிலேயே சைவ ஆங்கில பாடசாலையொன்றையும் தொடக்கி நடத்தி வந்தார்.

அத்துடன் சைவாசிரியர்களையும் சைவப்பிரசாரகர்களையும் சைவக்குருமார்களையும் பயிற்றுவிக்கவொரு கல்லூரியை சிதம்பரத்தில் உருவாக்க வேண்டுமென நாவலர் பெரிதும் விரும்பினார். இத்திட்டம் 'நாவலர் ஐந்தாண்டுத் திட்டம்' எனப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் நாமகரணம் செய்யப்பட்டது.

நாவலர் மறைவின் பின், அவரது மருகர் திரு. த.கைலாச பிள்ளை அவர்கள் நாவலர் பாடசாலையைத் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் கேந்திரநிலையமாகத் தொடர்ந்து நடத்தி வந்தார். அதே சமயம் நாவலரின் குறிக்கோளை அடைய உருவான சைவபரிபாலன சபையினர் சைவ ஆங்கிலக் கல்லூரிகளை உருவாக்க முயன்று பெருவெற்றி கண்டனர். சிறிது கால இடைவெளியின் பின் உருவான சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் நூற்றுக் கணக்கான சைவத் தமிழ்ப் பாடசாலைகளையும் தொழிற் கல்வி நிலையங்களையும் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றையும் நிறுவி நாவலரின் குறிக்கோள்கள் பலவற்றை நிறைவேற்றினர்.

குருமார்களைப் பயிற்றுவிக்கும் நாவலரின் இலட்சியத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க சித. மு. பசுபதிச்செட்டியார் அவர்கள் 1890 களில் யாழ். இந்துக் கல்லூரியில் குரு வகுப்பொன்றையும், 1960 களில் கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தினர் ஆதார குருகுலமொன்றைக் கிளிநொச்சியிலும் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபையினர் திருக்கேதீச்சரத்தில் சிவானந்த குருகுலம் ஒன்றையும் ஆரம்பித்தனராயினும், சேர். பொன். இராமநாதன் தமது பரமேஸ்வராக் கல்லூரிச் சாசனத்தில் குருமார் பயிற்சிக்குரிய திட்டங்களையும் சேர்த்திருந்தாராயினும், நாவலர் மனத்திருந்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிகரான குருமார், சமயப் பிரசாரகர்கள் பயிற்சிக் கல்லூரி இன்னும் நனவாகாத நிலையிலேயே உள்ளது.

சைவப் பாடசாலைகளில் கற்பிக்கக்கூடிய சைவாசிரியர்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்ற நாவலரின் எண்ணத்தை, சேர். பொன். இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரியில் சிறியளவில் நடத்திய ஆசிரியர் பயிற்சி வகுப்புக்களும், சைவவித்தியா விருத்திச் சங்கத்தினர் பெரியளவில் உருவாக்கிய திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையும் பூர்த்திசெய்தன. அதனால் 1940க்கும் 1970க்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணமெங்கும் தனித்துவமான உடை, பண்பாடு, எளிமை, கடமையுணர்வு, சமயப்பற்று, மொழிப்பற்று, நாட்டுப்பற்று யாவும் ஒருங்குதிரண்ட ஆசிரியர்கள் நூற்றுக் கணக்கில் எம்மிடையே வாழ்ந்து சமயத்திற்கும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் மகத்தான சேவை செய்தனர், இதுவே "கல்கி" அவர்களை யாழ்ப்பாணத்தில் "ஒருவர் தடக்கி விழுந்தாலும் ஒரு பண்டிதர் மீது தான் விழுவார்" என எழுத வைத்தது. இன்று அந்த ஆசிரிய பரம்பரை மறைந்துவிட்டது. இதுவே இந்நாட்டின் இன்றைய சமய, சமூகச் சீரழிவுகளுக்குக் காரணம் எனத் துணிந்து கூறலாம்.

1961 ஆம் ஆண்டில் பாடசாலைகள் அரசுடைமையாக்கப்பட்டதும் அத்துடன் சைவ ஆசிரியபயிற்சி முடிவுக்கு வந்ததும் நாவலர் கல்விப்பாரம்பரியம் தளர்ச்சி அடையக்காரணமாயின. 1961 ஆம் ஆண்டில் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டபோது இவ்வாறான தளர்வை எதிர்பார்த்து சைவ சமயத்தவர்கள் தீர்க்க தரிசனத்துடன் நடந்திருத்தல் வேண்டும். நாவலர்பெருமான் நிறுவிய முதற் பாடசாலையாகிய வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையை அப்போது அரசிடம் கையளிக்காது அதனை நாவலரின் பெருவிருப்பாக அமைந்ததும் நாவலர் ஐந்தாண்டுத் திட்டமெனப் பேசப்படுவதுமான சைவப் பிரசாரகர்கள், குருமார்கள் பயிற்சிக் கல்லூரியாக மாற்றியமைத்திருத்தல் வேண்டும்.

இக் கல்லூரியில் தமிழ் சமஸ்கிருத ஆங்கில மொழிகள், கிரந்த இலிபி, சைவசித்தாந்தம், வேத அத்தியயன ஸ்தோத்திர பாராயணப்பயிற்சி, பண்ணிசைப்பயிற்சி, சைவத்தமிழ் இலக்கியங்கள், சைவாகமங்கள், சைவாகமக் கிரியைப் பயிற்சி, சைவ - இந்துசமய வரலாறும் பண்பாடும், சோதிடம், பொதறிவு (சமூகவியல், உளவியல், சுகாதாரக்கல்வி, சமய ஒப்பீட்டுக் கற்கை) ஆகியன போதிக்கப்பட ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

முயற்சி செய்தால் இப்போது கூட அரசின் ஒப்புதல் பெற்று நாவலர் பாடசாலையை மேற்குறித்த பயிற்சிக் கலாசாலையாக மாற்றமுடியும். நாவலர் பாடசாலைச் சுற்றாடலில் வேறுபல பாடசாலைகள் இருப்பதும் நாவலர் பாடசாலையில் இப்போ கல்வி பயிலும் மாணவர் தொகை குறைவாயிருப்பதும் இதற்குச் சாதகமான அம்சங்களாகும்.


நாவலர் நிறுவிய முதற் பாடசாலை அதன் நூற்றியைம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இச்சமயத்தில் அதன் நினைவாக நாவலர் தர்மகர்த்தா சபையினர் நாவலரது நூல்களை வெளியிட்டும் அவர் வெளியிட்ட நூல்கள், கண்டனங்கள், ஆவேதனங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய சைவத்தமிழ் நூல்நிலையமொன்றை இப்பாடசாலையில் அமைத்தும் இப்பாடசாலை நாவலரின் கனவினை நனவாக்குமொரு சைவப்பிரசாரகர் குருமார் பயிற்சிக் கல்லூரியாகப் பரிணமிக்கவும் இதய சுத்தியுடன் கருமமாற்றிப் பெருமுயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

# நாவலர் மகாவித்தியாலய 150 வது ஆண்டு நிறைவு விழா

## நாவலர் திருவுருவச்சிலை திறந்து வைப்பு

## சேவையாளர்கள் கௌரவிப்பு

**சைவத்தமிழ்க் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடன் 1848 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சைவத்தமிழ்ப் பாடசாலை 1998 ஆம் ஆண்டு நூற்றைம்பது ஆண்டுகளை நிறைவு செய்தது. அதனைக் குறிக்குமுகமாகப் பாடசாலை சமூகமும் நாவலர் தர்மகர்த்தா சபையினரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விழா 09.02.2002 சனிக்கிழமை வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.**



திருவுருவச்சிலை

வித்தியாலயத்திற்கு அருகே அமைந்துள்ள சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடனும் வித்தியாலய நால்வர் திருக்கோயிலில் பிரார்த்தனையுடனும் விழா முற்பகல் ஒன்பது மணியளவில் ஆரம்பமாகியது. வித்தியாலய அதிபர் பாடசாலைக் கொடியை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து பாடசாலை முன்றலில் சிறிய அழகான மணிமண்டபமொன்றில் நிறுவப்பட்டுள்ள நாவலர் பெருமானின் திருவுருவச்சிலையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய சுவாமிகள் திறந்து வைத்தார்கள்.

அழகான அத்திருவுருவச்சிலை நாவலர் பெருமானுக்கு திருவாவடுதுறை ஆதீனத்தார் நாவலர் பட்டமளித்துக் கௌரவித்த போது வழங்கிய பட்டுப் பீதாம்பரம், அவர் அணிந்த உருத்திராட்ச மாலைகள், கௌரிசங்கம் ஆகியன அணிவிக்கப்பட்டு பொலிவுடன் காட்சியளித்தது.

திருவுருவச்சிலை திறந்து வைக்கப்பட்டதை யடுத்து வித்தியாலய அதிபர் திரு. ந. சிவராஜா தலைமையில் விழாவின் இதர நிகழ்ச்சிகள் வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் வித்தியாலய மாணவர்களின் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாகியது. வித்தியாலய நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவுவிழா மலர் வெளியிட்டமையும் நாவலர் தர்மகர்த்தாசபை மூத்த உறுப்பினர்கள் இருவரைக் கௌரவித்தமையும் விழாவின் இரு முக்கிய நிகழ்ச்சி களாயமைந்தன.

நூற்றைம்பதாவது ஆண்டு நிறைவு விழா மலரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் வெளியிட்டு வைத்தார். யாழ்ப்பாணக் கல்விவலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அவர்கள் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். விழா மலரை யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு.சி.சிவசரவணபவன் அவர்கள் மதிப்பீடு செய்தார்கள்.

இதனைத் தொடர்ந்து நாவலர் தர்மகர்த்தா சபையின் மூத்த உறுப்பினர்களாகிய சைவபூஷணம் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் நாவலர் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியருமாவார். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாவலர் பாடசாலையுடன் மிக நெருக்கமாக




மூத்த உறுப்பினர் கௌரவிப்பு

அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்தவர். பாடசாலை பழைய மாணவர் சங்கம், நாவலர் தர்மகர்த்தா சபை ஆகியவற்றின் நீண்டகால உயிரோட்டமுள்ள உறுப்பினர். நாவலர் கோட்பாடுகளுக்கமையத் தனது

(14ம் பக்கம் பாக்க)

# சைவபரிபாலன சபை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

which is the residence of Proctor Ponnampalam, lent by him for the occasion.

In spite of the short time at the disposal of the Committee grand preparations were made to accord the Swami a fitting reception at the Hindu college. A magnificient pandal was put up in front of it and tastefully decorated. The whole way from the town to the college, a distance of about two miles, was decorated and illuminated Hundreds of plantain trees were planted on both sides of the road, and greetings and flags adorned the whole route. The scene was picturesque in the extreme, and great enthusiasm prevailed among the people. Thou-sands of them from all parts of the peninsula assembled along the route to get a glimpse of the renowned Swami. From 6.00 p m. to 12.00 p.m the Jaffna - Kankesanthurai Road, as far as the Hindu College, was impassable for carts and carriages, which had to find their way by other roads.

The torchlight procession, with native music, from the Town to the Hindu College, which started at 8 30 p m was imprecedentedly imposing. It is estimated that more tha fifteen thousand persons took part in it - all on foot except the Swami and party who went in two Carriages, one of which with the Swami was drawn by a pair. The whole distance of two miles looked like a sea of heads, and it speaks well of the Hindu crowd thst no mishap did take place, and that perfect order prevailed from start to finish. At the gate of almost every house on both sides of the road from the Grand Bazaar to the Hindu College, a distance of about one mile and a half — there were placed "Nirai Kudam" and lamps- the highest honour which could be done according to the Hindu idea It should be remarked in this connection that along the whole route there is but one Christian house which is the station of the Wesleyan Mission at Vannarponnai, all the rest belng Hindu ones. The Swami alighted from the carriage and worshipped at the Sivan and Kathiresan Temples and was garlanded by the Temple authorities. He was also garlanded at the gates of some houses on the way, and when he reached the College at 10 p m. he had on his neck more than half a dozen beautiful garlands. For hours before the arrival of the Swami the pandal wan decorated to the utmost capacity.

There was also a large number of Christians, who had come to hear the Swami speak, his reputation as an eloquent speaker and preacher having preceded him. He was recei-ved at the entrance by Mr. S. Chel-lappa pillai, retired Chief Justice of Travancore, who conducted him to the raised Dais and garlanded the Swami.

(அடுத்த இதழில் தொடரும்)

# பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் புண்ணியநாச்சி அம்மையார் நினைவாக 10-02-2002 ஆம் திகதி வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பண்ணிசைப்போட்டி முடிவுகள் கீழே தரப்படுகிறது. முதற் பரிசாகத் தங்கப்பதக்கமும் இரண்டாம் பரிசாக வெள்ளிப்பதக்கமும் மூன்றாம் பரிசாக வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டன. 19-02-2002 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் சபையாரின் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற புண்ணியநாச்சி அம்மையார் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. க. இராசதுரை அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.

### கீழ்ப்பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வி மயூரதி குகனேஸ்வரன் | யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை | முதலாம் பரிசு |
| செல்வி கோபிகா சே. | யா / மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை | இரண்டாம் பரிசு |
| செல்வி ரேணுகா சற்குணபாலன் | யா / திருக்குடும்பக் கன்னியர்மடம் | மூன்றாம் பரிசு |

### மத்திய பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வி பிரகஸ்வினி ரஞ்சன் | யா / வேம்படி மகளிர் கல்லூரி | முதலாம் பரிசு |
| செல்வி சர்மிளா சிவபாதம் | யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| செல்வி விஜயருக்ஷாயினி சந்திரசேகரம் | யா / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | மூன்றாம் பரிசு |

### மேற்பிரிவு

| | | |
|---|---|---|
| செல்வி வாசுகி கிருஷ்ணன் | யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி | முதலாம் பரிசு |
| செல்வன் சுந்தரமூர்த்தி கபிலன் | யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| செல்வன் சத்தியமூர்த்தி லக்மன் | யா / யூனியன் கல்லூரி | மூன்றாம் பரிசு |
| செல்வன் அழகேசன் அமிர்தலோஜனன் | யா / கொக்குவில் இந்துக்கல்லூரி | மூன்றாம் பரிசு |

# திருவுருவ வழிபாடு

(4ம் பக்கத்தொடர்ச்சி)

திட்டை செய்யப்பட்டு வழிபாடு செய்யப்படும். இத்திருவுருவங்களுக்குத்தான் நித்திய திருமஞ்சனமும் பூசையும் நடைபெறும். நைமித்திய பூசை வழிபாடும் இவற்றிற்குத்தான் நடைபெறும். தாமிரத்தால் வார்க்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் திருவுருவங்களுக்கு நாள்தோறும் திருமஞ்சனம் நிகழ்வதில்லை; பூசை மட்டுமே நடைபெறும்.

திருவுருவங்களை அமைக்குஞ் சிற்பி, அவ்வவற்றின் பிரமாணங்களுக்கு அமையவே சிலைகளை அமைக்க வேண்டும். இவற்றில் தவறுகள் ஏதேனும் நேரின், சிற்பி முதலாக அந்நாடு முழுவதற்குமே பெருங்கேடுகள் சூழும் எனச் சிற்ப ஆகமங்களும், சிற்ப நூல்களும், புராணங்களும் கூறுகின்றன.

திருவுருவங்களின் உயரம் பேராங்குலம், மானாங்குலம், மாத்திராங்குலம், தேகலப்தாங்குலம் என்ற நால்வகை விக்கிரக அளவு நூற் பிரமாணங்களுக்கு அமைந்ததாக இருக்கும். இதேபோன்று இவற்றின் சுற்றளவு அளக்கும் முறை; மானம், பிரமாணம், உன்மானம், பரிமாணம், உபமானம், இலம்பமானம் என ஆறு வகையாகும்.

இங்ஙனம் ''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று மில்லார்க்கு ஆயிரந் திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ'' என்ற திருவாசக வாக்குப்படி, உருவம் ஒன்றின்றி எங்குமாய் எல்லாமாய் நிற்கும் பரமசிவத்திற்குச் சிவாலயங்களில் முதலுருவாகச் சிவலிங்கத்தையும், வழி உருவங்களாகத் தாண்டவர் (நடராசர்), தேவியார், தட்சணாமூர்த்தி, ஆகிய மூவரையும், சார்புருவங்களாக விநாயகர், சுப்பிரமணியர், காலவைரவர் போன்ற மூர்த்திகளையும் வகுத்து வைத்திருக்கின்றனர். இவருள் சிவம் அருவம் அல்லது அரூபம் என்றும், சிவலிங்கம் ரூபாரூபம் அல்லது அருவுருவம் என்றும், மற்றை இரு மூவரும் ரூபம் அல்லது உருவம் என்றும் கூறப்படுகின்றனர்.

உருவமற்ற பரமன் கொண்ட கோலங்களையெல்லாம் வழிபடும் வழக்கம் சைவத் தமிழர்களிடையே பெரும்பாலும் பண்டு தொட்டு இருந்து வரக்காண்கின்றோம். இவ்வுருவங்களை வழிபடும் தோறும், இவற்றுடன் தொடர்பு கொண்ட நிகழ்ச்சிகளையும் வழிபடுவோர் நினைவு கூருகின்றனர். ஆன்மாக்கள் ஈடேற வேண்டி அவன் திருவிளையாட்டாக நிகழ்த்திய சம்பவங்கள், அவனது ஒவ்வொரு திருக்கோலப் பெருமையனையும் நினைவுறுத்துகின்றன. வெறும் சம்பவங்களைச் சித்திரிக்கும் இச்சிலைகள், நாளடைவில் அச்சம்பவங்களை உணர்த்துவதை விட்டு, எம் அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப, தம் அடிப்படையிற் புதைந்து கிடக்கும் பேருண்மைகளை உணர்த்துவனவாக மாறிவிடுகின்றன. உருவ அமைப்பு, அது சுட்டும் வரலாறு, உருவத்தின் திருக்கரங்களில் விளங்கும் படைக்கலங்கள், கைகள் காட்டும் முத்திரைகள், சிறப்பாக அபய வரதமாக அமைந்திருக்கும் கரங்கள், அவன் அணிந்திருக்கும் அணிகலன்கள் என்பவை உணர்த்தும் பொருள்கள் திருவுருவங்களை வணங்கும் போது வணங்குவோர் கருத்திற் பதியவேண்டும். ஏனெனில் இவற்றின் தத்துவம் விளங்கி வழிபடுவது மேலான் அருளை வழங்கும் என்பதற்காகவாம்.

இறைவன் ஊர்பேரற்றவன்; குணங்குறியும் உருவமும் அற்றவன். ஆயின் ஆன்மாக்களிடம் பூண்ட அன்பினால் திருவுருவங்களில் உருவாகிக் காட்சி அளித்தருளுகின்றான். இக்காட்சி உருவங்கள் யாவும் கருணை வடிவானவையாம். இறைவனுக்கெனச் சிறப்பாக உரிய ஐந்தொழில்களை நிகழ்த்தி நிற்றலை அறுபத்து நான்கு கோணங்களினின்றும் படம் பிடித்துக் காட்டுபவை இத்திருவுருவங்களாகும்.

சிவாகம விதிப்படி கட்டடங்கள் அமைக்கப்பட்டு, மகாகும்பாபிடேகத்தினால் தெய்வப் பிரதிட்டை செய்யப்பட்டு நித்திய நைமித்தியக் கிரியைகள் செய்யப்பட்டு வருகின்ற ஆலயங்களில் வேதபாடம் செய்து வைக்கப்பட்டுள்ள யந்திரங்களெல்லாம் ஆலய திருவுருவங்களுக்கு அடியில் வைக்கப்பட்டிருப்பது அருட்கருவிகளாம். அவற்றைத் தம்மிடத்துக் கொள்ளாத உருவங்களெல்லாம் வெறுஞ் சிலைகளாம். அவை ஆராதனைக்கேற்ற மூர்த்திகள் ஆகமாட்டா. ஆலயங்களில் யந்திரமே உயிர்நாடியாக உள்ளது. அதுவே பூசைக்கு இன்றியமையாதது அதன் மேலுள்ள திருவுருவம் (விக்கிரகம்) அருவப் பொருளை அறியமாட்டாத மனத்தின் கவர்ச்சிக்காகவும், மக்கள் மனத்தை ஒருமுனைப்படுத்துவதற்காகவுமே உதவுவது அதனாற்றான் ஆன்மார்த்த பூசையில் பலர் சிலையின்றி வெறும் யந்திரத்தை மாத்திரம் வைத்துப் பூசை செய்யும் வழக்கம் இருந்து வருகின்றது அன்றியும் இந்த யந்திரங்கள் அறிதறியாகக் காட்டும் உண்மையும் ஒன்றுளது. யந்திரம் முதலில் வரையப்படும் போது அது ஓர் உலோகத் தகடாய் - வெறும் சடப் பொருளாகவே இருக்கும். பின் மந்திரம் முத்திரை பாவனைகளாலும், உரிய கிரியைகளாலும் அது பாடம் பண்ணப்படும்போது,, இரும்புத் துண்டு காந்தமாவது போல, அச் சடப் பொருள் சிறிது சிறிதாக அருட் கருவியாதற்குரிய பக்குவம் பெற்றுக் கொண்டு வரும். இது சித்பிரகாச ஆவாகனம் எனப்படும். முடிவில் இத்தகட்டில் பூரண உருவேறி யந்திர தாபனமும், பிராணப் பிரதிட்டையும் செய்யப்படும்போது, அது முழுவதும் இறைவனது அருட்கருவியாக மாறிக் கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய அனுக்கிரக சக்தியை நாற்புறமும் இரவும், பகலும் இடைவிடாது வீசிக் கொண்டே இருக்கும் என ஞானநூல் வல்லோர் கூறுவர். ஆலயங்களில் நடைபெறும் நித்திய ஆராதனைகளால் உண்டாகும் பயன்களில் ஒன்று அங்ஙனஞ் செலவாகும் சக்திக்கு ஈடு கொடுத்து அருளாற்றலை நிறைவு செய்தலாம். இஃது அன்றாடம் செய்யவேண்டிய அறிமுக ஆவாகனத்தால் நடைபெறும். ஆராதனை இல்லாத யந்திரங்கள் நாளாவட்டத்தில் சக்தி இழந்துவிடும். இதனால் மூர்த்திகரமும் இறங்கிவிடும் என்பது தெளிவாகும்.

ஆகம விதிகளின்படி அபிடேகங்கள் நடைபெறும் கோயில்களில் அங்கு பிரதிட்டை கும்பாபிடேகங்களின்போது பிம்பத்திலும், அதன் யந்திரத்திலும் தெய்வீகசக்தி சேமித்து வைக்கப்பட்டுள்ளன. தெய்வீக சக்திகளும், வசீகர அருள் அலைகளும் திருமஞ்சனத் திரவியங்களில் தோய்ந்துள்ள சக்திகளால் வீரியம் பெறுகின்றன ஒவ்வொரு நேரப்பூசை முடிவிலும் சண்டேசுவரர் பூசையும், விசர்ச்சனமும் செய்யப்படும்போது பிரசன்ன மூர்த்திகள் யாவரும் வெளியேறுவர். அந்நேரம் அங்கு திரண்டிருந்த அருள்முழுவதும் உலக நன்மையின் பொருட்டு நாற்புறமும் நாட்டிற் பரவும்.

(15ம் பக்கம் பார்க்க)

உ

# சைவநெறி - தரம் 11

## வினாவும் விடையும்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் 2001 ஆம் ஆண்டு நடத்திய தரம் 11க்கான சைவ நெறித் தேர்வு பகுதி I இன் வினாக்கள் கீழே தரப்படுகின்றன. எல்லா வினாக்களுக்கும் ஒரு மணி நேரத்தில் விடையளிக்கவேண்டும். சரியான விடைகள் இன்னோர் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. பகுதி II இன் வினாக்களும் அவற்றிற்கான மாதிரி விடைகளும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

### சரியான விடையைத் தெரிவு செய்க:

1. இறைவனின் திருவுருவக் கோலங்கள்
   1) மூன்று 2) ஐந்து 3) ஏழு 4) ஒன்பது
2. உலோகங்களால் வார்க்கப்படும் திருவுருவங்கள்
   1) சித்திரம் 2) சித்தார்த்தம்
   3) சித்ராபாசம் 4) வாமனம்
3. ஆவணி மாதப் பூரணைக்கு முன்னுள்ள வெள்ளிக் கிழமையில் அனுட்டிக்கும் விரதம்
   1) கேதாரகௌரி 2) காரடையாநோன்பு
   3) வரலட்சுமி விரதம் 4) நவராத்திரி
4. பெருமாக்கோதையார் என அழைக்கப்படுபவர்
   1) நம்பியாரூரர் 2) சேரமான் பெருமாள்
   3) அநபாயசோழன் 4) சுந்தரர்
5. காமன் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்படும் இடம்
   1) யாழ்ப்பாணம் 2) மட்டக்களப்பு
   3) திருகோணமலை 4) மலையகம்
6. இலங்கையில் இராமருடைய பிரமகத்தி தோசம் நீங்கிய திருத்தலம்
   1) கோணேஸ்வரம் 2) முன்னேஸ்வரம்
   3) நகுலேஸ்வரம் 4) கேதீஸ்வரம்
7. ஒருவர் இறந்தவுடன் அந்தச் சந்தர்ப்பத்தில் நடைபெறும் கிரியை
   1) உத்தரக்கிரியை 2) சிராத்தக்கிரியை
   3) அந்தியேட்டி 4) ஏகோதிட்டம்
8. நடுகல் வழிபாட்டு முறை நடைபெற்ற காலம்
   1) சங்ககாலம் 2) சங்கமருவியகாலம்
   3) பல்லவர்காலம் 4) சோழர்காலம்
9. சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டுப் பதிகங்களின் எண்ணிக்கை
   1) எட்டு 2) பதின்மூன்று
   3) பத்து 4) இருபத்தெட்டு
10. சித்தாந்த அட்டகம் அருளியவர்
    1) மெய்கண்டதேவர்
    2) உமாபதிசிவாச்சாரியார்
    3) மறைஞானசம்பந்தர்
    4) அருணந்தி சிவாச்சாரியார்
11. ஆணவ மலத்தால் மட்டும் பீடிக்கப்பட்டவர்கள்
    1) சகலர் 2) பிரளயாகலர்
    3) விஞ்ஞானகலர் 4) இருடிகள்
12. சண்டேஸ்வரநாயனார் முத்தியடைந்த நெறி
    1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்
13. "பட்டகட்டையிற் பகற்குருடு போகின்றது" எனக் கூறியவர்
    1) உமாபதிசிவாசாரியார்
    2) மனவாசகங்கடந்தார்
    3) மறைஞானசம்பந்தர்
    4) உய்யவந்ததேவனார்
14. செல்லப்பா சுவாமிகள் சமாதியடைந்த வருடம்
    1) 1915 2) 1891 3) 1872 4) 1822
15. தமது பெயர்களோடு சிவன் என்ற அடைமொழியையும் சேர்த்து மூத்த சிவன், கிரிகண்டசிவன் என்ற பெயர்களோடு சிங்கள மன்னர்கள் ஆண்ட காலம்
    1) பொலநறுவைக்காலம்
    2) அநுராதபுரக்காலம்
    3) ஐரோப்பியர்காலம்
    4) ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்
16. பதினெண் புராணங்களில் விஷ்ணு புராணங்களின் எண்ணிக்கை
    1) 08 2) 04 3) 05 4) 02
17. பிரபோத சைதன்யர் என்ற பிரமச்சரிய நாமத்தை உடையவர்
    1) ஆறுமுகநாவலர்
    2) சேர். பொன். இராமநாதன்
    3) சுவாமி விபுலானந்தர்
    4) சு. சிவபாதசுந்தரனார்
18. இந்திரன் துருவாசமுனிவரால் பெற்ற சாபம் நீங்கிய தலம்
    1) வண்ணை வெங்கடேஸ்வரர் கோயில்
    2) பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில்
    3) வல்லிபுர ஆழ்வார் கோயில்
    4) கோப்பாய் கிருஷ்ணர் கோயில்
19. வாய்மை எனப்படுவது
    1) பொய் கூறுதல்
    2) பகுத்துண்டு வாழ்தல்
    3) கொல்லாமை
    4) பிறருக்கு தீமை விளைவிக்காது பேசுதல்
20. இறைவனின் எண்குணங்களில் "தூய உடம்பினன் ஆதல்" குறிப்பது
    1) தூய்மையின் வடிவம் 2) பேரின்ப வடிவம்
    3) கருணையின் வடிவம் 4) பேராற்றல்
21. அடங்கன் முறை என அழைக்கப்படுவது
    1) தேவாரம் 2) திருவாசகம்
    3) திருவிசைப்பா 4) திருப்பல்லாண்டு

(13ம் பக்கம் பார்க்க)

# சைவநெறி - தரம் 11

## வினாவும் விடையும்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

22. சுந்தரருக்குப் பொதிச்சோறு கிடைத்த தலம்
1) திருப்பைஞ்ஞீலி 2) திருவீழிமிழலை
3) திருக்குருகாவூர் 4) திருவாரூர்

23. ''கடையவனேனை—'' என்ற திருவாசகம் பாடப்பட்ட தலம்
1) உத்தரகோசமங்கை
2) திருப்பெருந்துறை
3) திருவிடைமருதூர்
4) சிதம்பரம்

24. அனல்வாதம் புனல்வாதம் புரிந்து சைவசமயத்தின் பெருமையை உலகறியச் செய்தவர்
1) வாகீசர் 2) பாலறாவாயர்
3) வன்றொண்டர் 4) சொற்கோ

25. மெய்கண்டார் முத்தியடைந்த தினம்
1) வைகாசி மூலம் 2) சித்திரைச் சதயம்
3) ஐப்பசிச் சுவாதி 4) புரட்டாதி பூரம்

26. நெஞ்சமே கோயிலாக, நினைவே சுகந்தமாக, அன்பே மஞ்சனநீராக பூசை செய்தவர்
1) அருணகிரிநாதர் 2) குமரகுருபரர்
3) தாயுமானவர் 4) அபிராமிப்பட்டர்

27. மார்க்கண்டேய படலத்தில் 'காவியம் மலர்கருத்த'... பாடலடியில் என்ற பங்கயச் சதுர்முகத்தன் எனப்படுபவர்
1) சிவன் 2) விஷ்ணு
3) உருத்திரன் 4) நான்முகன்

28. கன்னிகாதானம் என்னும் கிரியை முறை நடைபெறும் சந்தர்ப்பம்
1) ருதுசாந்தி வைபவம் 2) திருமணம்
3) வளைகாப்பு 4) நாமகரணம்

29. பத்தினித் தெய்வ வழிபாட்டை இலங்கையில் அறிமுகம் செய்தவன்.
1) கஜபாகு மன்னன் 2) பண்டுகாபயன்
3) வாசுதேவன் 4) அபயன்

30. இலங்கையை சிவபூமி எனக் குறிப்பிட்டவர்
1) பாகியன் 2) திருமூலர்
3) வலபொல இராகுல 4) குவைறோஸ்

31. தேவர்களால் தாபிக்கப்பட்ட லிங்கம்
1) தைவிகலிங்கம் 2) ஆரிடலிங்கம்
3) காணலிங்கம் 4) பரார்த்தலிங்கம்

32. சமயகுரவர்களுக்கு காலத்தால் முற்பட்டவர்
1) ஆண்டாள் 2) திலகவதியார்
3) காரைக்காலம்மையார் 4) மங்கையற்கரசி

33. முல்லைநிலத் தெய்வமாக வழிபடப்பட்டவர்
1) திருமால் 2) முருகன்
3) இந்திரன் 4) கொற்றவை

34. உடற்பற்று இருந்தால் உடைப்பற்றும் இருக்கும் அந்தப்பற்றையும் விடு என்ற தத்துவத்தை விளக்கும் மூர்த்தம்
1) சக்தி மூர்த்தம் 2) விநாயக மூர்த்தம்
3) முருக மூர்த்தம் 4) வைரவ மூர்த்தம்

35. கிழக்கு மாகாணத்தில் ஆடி அமாவாசையன்று பிதிர்க்கடன் செய்யும் ஆலயம்
1) மண்டூர் முருகன் ஆலயம்
2) மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்
3) சித்தாண்டி முருகன் ஆலயம்
4) வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்

36. திருவுருவங்களின் தாள அமைவுகளுக்கேற்ப ஒன்பது தாள உயரமுள்ள திருவுருவம்
1) வாமனம் 2) மானுடம்
3) தெய்வீகம் 4) இராக்கதம்

37. அபிஷேகக் கந்தன் என்று வழிபடப்படுபவர்.
1) நல்லூர்க்கந்தசுவாமி
2) மாவிட்டபுரம் கந்தசுவாமி
3) செல்வச்சந்நிதி முருகன்
4) கதிர்காமக் கந்தன்

38. விநாயகரின் மோதகம் ஏந்திய இடக்கரம் குறிப்பது
1) படைத்தல் 2) காத்தல்
3) அழித்தல் 4) மறைத்தல்

39. சிவதொண்டன் என்ற மாத இதழைத் தொடக்கி வைத்தவர்
1) செல்லப்பா சுவாமி 2) நவநாதசித்தர்
3) கடையிற்சுவாமி 4) யோகர் சுவாமி

40. தமிழ் வேதம் எனப்படுவது
1) திருமந்திரம் 2) தேவாரம்
3) கந்தபுராணம் 4) இதிகாசம்

(40 x 1 புள்ளி = 40 புள்ளிகள்)

(விடைகள் 15ம் பக்கத்தில்)

## சைவபரிபாலன சபை

### சமய நிகழ்ச்சிகள் - 2002

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | (மார்கழி 17) | 01-01-2002 | திருவாசகம் முற்றோதல் |
| செவ்வாய் | (மாசி 7) | 19-01-2002 | புண்ணியநாச்சியம்மையார் தினம் |
| திங்கள் | (சித்திரை 23) | 06-05-2002 | திருநாவுக்கரசு நாயனார் குருபூசை |
| செவ்வாய் | (வைகாசி 14) | 28-05-2002 | திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை |
| சனி | (ஆடி 29) | 13-07-2002 | மாணிக்கவாசகர் குருபூசை |
| புதன் | (ஆவணி 29) | 14-08-2002 | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை |
| வெள்ளி | (ஐப்பசி 29) | 15-11-2002 | சைவசமய தீட்சை |
| புதன் | (கார்த்திகை12) | 27-11-2002 | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை |

## நாவலர் மகா வித்தி....

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டு செயற்படுபவர். சைவ பரிபாலன சபையின் முக்கிய அங்கத்தவராகவும் உபதலைவராகவும் தேர்வுச் செயலாளராகவும் சமயப் பிரசார அமைச்சராகவும், பல ஆலயங்களின் பரிபாலன சபைகளின் அங்கத்தவராகவும் விளங்கி, சமய, சமூக சேவை பல ஆற்றி வரும் பெருந்தகையினர்.

ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் அவர்கள் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்களின் மதிப்புக்குரிய மாணவர்களில் ஒருவர். நாவலர் மரபில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் இலட்சியத்தை உடையவர். ''எனக்கு வாய்த்த அநுமன்'' எனப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களால் பாரட்டப்பட்டவர். பண்டிதமணி அவர்களுக்கும் ஆசிரியமணி பஞ்சாட்சரம் அவர்களுக்கும் இடையிலான உறவின் செறிவு குரு - சிஷ்ய உறவுக்கு அப்பால் தந்தை - மகன் உறவு போல நெருக்கமாயிருந்தது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை நூல் வெளியீட்டுச்சபைச் செயலாளராக இருந்து பண்டிதமணியின் பல நூல்களை அச்சேற்றியவர். உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் திருப்பணிச்சபைச் செயலாளராகவும் சைவபரிபாலன சபையின் சைவப்பிரசார அமைச்சராகவும் பணியாற்றுபவர். முப்பத்தேழு ஆண்டுகள் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராகப் பணியாற்றியவர். நாவலர் தர்மகர்த்தா சபையின் நீண்டகால உறுப்பினர்.

கௌரவிக்கப்பட்ட இரு மூத்த உறுப்பினர்களின் தன்னலமற்ற பணிகளைப்பாராட்டி யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் திரு. க. சிவராமலிங்கம் அவர்கள் பாராட்டுரை நிகழ்த்தினார். அத்துடன் முற்பகல் நிகழ்ச்சிகள் தேவார பாராயணத்துடன் நிறைவுற்றது விழாவுக்கு வருகை தந்தோருக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் இரண்டு மணிக்கு ஆரம்பமாயிற்று. யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன், செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன், உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. எம். எஸ். சிறிதயாளன் ஆகியோரின் சிறப்புரைகளும் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. போட்டிகளில்பங்கு பற்றி வெற்றி பெற்றமாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பெற்றன.

## சைவ சமயப் பெருநாள்கள்

### (மாசிப்பூரணை முதல் பங்குனிப்பூரணை வரை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாசி | 15 | உ | (27-02-2002) | புதன் | பூரணை விரதம் மாசி மகம் |
| | 18 | உ | (02-03-2002) | சனி | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| | 27 | உ | (11-03-2002) | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 28 | உ | (12-03-2002) | செவ்வாய் | மகா சிவராத்திரி விரதம் |
| | 29 | உ | (13-03-2002) | புதன் | அமாவாசை விரதம் |
| பங்குனி | 01 | உ | (15-03-2002) | வெள்ளி | பங்குனி மாதப்பிறப்பு |
| | 04 | உ | (18-03-2002) | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| | 05 | உ | (19-03-2002) | செவ்வாய் | கார்த்திகை விதரம் |
| | 06 | உ | (20-03-2002) | புதன் | ஷஷ்டி விதரம் |
| | 08 | உ | (22-03-2002) | வெள்ளி | நல்லைக்குருமணி குருபூசை |
| | 11 | உ | (25-03-2002) | திங்கள் | சிவயோக சுவாமிகள் குருபூசை |
| | 12 | உ | (26-03-2002) | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 14 | உ | (28-03-2002) | வியாழன் | பூரணை விரதம், பங்குனி உத்தரம் |

## வாசகர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்

உங்களில் அநேகரது சந்தா அடுத்த மாதத்துடன் (பங்குனி) முடிவடைகிறது தயவு செய்து சந்தாவைப் புதுப்பித்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
(Saiva Paripalana Sabai, Jaffna) என்ற பெயருக்கு
காசோலைகள் சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் சந்தாவைப் பணமாசச் செலுத்த விரும்பின் பின்வரும் இடங்களிலொன்றில் செலுத்தலாம்.
எழுதப்படவேண்டும். வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள

அ) 66, கல்லூரி வீதி, நீராவியடி, சைவபரிபாலன சபையாரின் நாவலர் ஆச்சிரம மண்டபம்.

ஆ) பாரதி பதிப்பகம், 430, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

இ) சிவகுருநாதபீடம், குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தபால் மூலம் தொடர்புகொள்வோர் பத்திராதிபர், இந்துசாதனம், 450, K. K. S. வீதி, யாழ்ப்பாணம் அல்லது பத்திராதிபர், இந்துசாதனம், 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதவும்.

தங்கள் ஆதரவுக்கு நன்றி.

### சந்தா விபரம்:

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | | ரூபா | 12/- |
| இலங்கையில் வருடசந்தா (தபாற் செலவுட்பட) | | ரூபா | 150/- |
| இந்தியாவில் வருட சந்தா (தபாற் செலவுட்பட) | இந்திய ரூபா | | 225/- |
| | அல்லது இலங்கை ரூபா | | 350/- |
| ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா, தென்கிழக்கு ஆசியநாடுகள் வருடசந்தா (தபாற் செலவுட்பட) | Sterling £ | | 5/- |
| | அல்லது US $ | | 7/- |
| | அல்லது இலங்கை | ரூபா | 500/- |
| கனடா, அமெரிக்கா வருடசந்தா (தபாற்செலவுட்பட்ட) | US $ | | 10/- |
| | அல்லது Can $ | | 12/- |
| | அல்லது இலங்கை | ரூபா | 600/- |

# சைப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பணிச் சபை (இலங்கை) என்ற சபையை நிறுவினார். அச்சபையின் முதற் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டார். 1952 ஆம் ஆண்டுவரை நான்கு ஆண்டுகள் அரிய பணி ஆற்றினார். அவரது பங்களிப்பை நான்கு வகைப்படுத்தலாம்.

முதலாவது முன்னர் செங்கற்களால் கட்டப்பட்டிருந்த சிறிய கோயிலை 1952 ஆம் ஆண்டில் பழுது பார்த்துப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்வித்து அடியார்கள் வந்து வழிபடக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை.

இரண்டாவது திருக்கேதீச்சர ஆலயததிற்கு அளப்பரும் பணியாற்றிய சேர் கந்தையா வைத்தியநாதன் போன்றோரைத் தன்னருட் பார்வையால் ஈர்த்து திருக்கேதீச்சரத் திருப்பணியில் ஈடுபடவைத்தமை.

மூன்றாவது தம்மிடம் படித்து நல்ல உத்தியோகத்தில் செல்வம், செல்வாக்கோடு இருந்தவர்களுடன் தொடர்பு கொண்டு, திருப்பணி வேலைகளை முடுக்கி விட்டதாகும். மலாயாவில் வசித்துவந்த தமது முன்னாள் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களுக்குத் தமது பழைய மாணவர்களுள் ஒருவரும் காநுங் நகரில் வாழ்ந்து ஆசிரியப்பணி புரிந்தவருமாகிய அமரர் தம்பையா மயில்வாகனன் என்ற பெரியவர் மூலம் வேண்டுகோட் பத்திரங்கள் அனுப்பி, பழைய மாணவர்களும் ஏனைய சைவ அன்பர்களும் சேர்ந்து திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை (மலாயாக் கிளை)யை நிறுவச் செய்தார்கள். இச்சபை 13-07-1949 இல் மலாயாக் கிளைச் சபையாக நிறுவப்பட்டுத் தாய்ச்சபையின் அங்கிகாரம் பெற்று மலாயா அரசினரால் பதிவு செய்யப்பட்டு இன்றும் இயங்கி வருகிறது.

திருக்கேதீச்சர மகிமையை எடுத்துரைத்து மலாயாவிலுள்ளவர்களின் சிந்தனையை ஈர்ப்பதற்காகச் சைவப் பெரியார் பின்வருமாறு எழுதியிருந்தார்கள்.

*"எமக்கு எமது உணவும் உடையும் எத்துணை முக்கியமோ திருக்கேதீச்சரம் (எமது ஆன்மாவுக்கு உணவும் உடையுமானதால்) அத்துணை முக்கியம். எனவே எவ்வளவு பணத்தட்டுப்பாடும் இதற்கு நிதியுதவுவதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது. கொடுக்கப்படும் தொகை முக்கியமல்ல எவ்வளவு உள நிறைவுடனும் அன்புடனும் கொடுக்கப்படுகின்றதென்பதே முக்கியம்."*

சைவப்பெரியாரின் வேண்டுதலினால் ஈர்க்கப்பட்ட மலேசியா வாழ் சைவப்பெரியார்கள் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை மலாயாக் கிளைமூலம ஆலயத்தின் இரண்டாவது பெரிய கர்ப்பகிருகமான கௌரியம்பாள் கோவில் திருப்பணியை மேற்கொள்ளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அத்துடன் சமகாலத்தில் ஈழத்தவர்கள் கேதீசநாதரின் கர்ப்பக்கிருகத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென மலாயாக் கிளையினர் தாய்ச்சபைக்கு வேண்டுகோள் விடுத்தனர். (காலத்துக்குக்காலம் மலாயாக் கிளையினர் பெரும் பொருள் சேகரித்துக் கொடுத்து திருப்பணிகளை நிறைவேற்றி சைவப்பெரியார் மறைவின் பின் - 1976ஆம் ஆண்டில் - திருக்கேதீச்சர மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.)

நான்காவதாக, ஆலயத்தைப் பழைய உன்னத நிலைக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய விரிவான திட்டங்களைத் தீட்டியமை. புதிய ஆலயம் கருங்கற் பணியாகவும் விசாலமாககவும் அமைப்பதற்காக முதலில் தமிழ் நாடு பழநி தவத்திரு சைவசித்தாந்த ஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமிகளின் ஆலோசனையுடன் கோவில் கட்டட உருவமைப்புத் திறமையாளர் திரு. வி. என். நரசிம்மன் அவர்கள், ஸ்தபதியார் செல்லக்கண்ணு முதலானோரின் உதவிகளும் கோரப்பட்டது. மூன்று பிரகாரங்கள் கொண்ட பெரிய கோவிலாகவும், இராச கோபுரம், சிவன், அம்பாள் கோவில்களுடன் பரிவார மூர்த்திகளுக்கும சிறிய கோவில்கள் கட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சைவப்பெரியார் தலைவராகவிருந்த காலத்தில் அடிகோலிய பணி, சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் காலத்தில் எழுச்சி பெற்று திரு. இரா. நமசிவாயம் அவர்களது காலத்தில் முற்றுப்பெற்று 1976 ஆம ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது.

சைவசித்தாந்தக் கொள்கைகளை மிகக் கண்டிப்பாகப் பின்பற்றும் சைவப்பெரியாரது உறுதியான நிலைப்பாடு அவரை 1952 ஆம் ஆண்டு திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் பதவியிலிருந்து விலகுதற்குக் காரணமாயமைந்தது. சைவசமயம் நிலைபெறுதற்கு மிக முக்கியமானதாக அவர் கருதிய விடயங்களில், சபையானது அவருடன் ஆலோசிக்காதும், அவரது தீவிர ஆட்சேபனையைக் கவனத்திற் கெடுக்காதும் சில முடிவுகளை மேற கொண்டதே அவர் சபையிலிருந்து விலகக் காரணமாயமைந்தது சைவப் பெரியாரால் மிக உக்கிரமாக ஆட்சேபிக்கப்பட்ட விடயம் ஆலயத்தில் நவக்கிரகங்களைப் பிரதிட்டை செய்தமையாகும். சிவாலயங்களில் நவக்கிகரங்களைப் பிரதிட்டை செய்வது, சைவசமயததின் அடிவேர்களை வெட்டிவிடுவதற்குச் சமமாகும் என்பது சைவப்பெரியாரின் நிலைப்பாடு. ஏனெனில், சைவ சாஸ்திரங்களின் படி, சைவர்கள் சிவபெருமானை அவரின் திருவருட்கருணையின் வெவ்வேறு அம்சங்களைக் குறிக்கும் முகூர்த்தங்களையும் சிவபெருமானின் அடியவர்களையும மட்டுமே வணங்குதற்குரியவர்கள நவக்கிரகங்கள் சிவபெருமானின் திருவருட் குணங்களைக் குறிக்கும் மூர்த்திகள் அல்ல. சிவபெருமானின் அடியார்களுமல்ல.

திருப்பணிச்சபையிலிருந்து விலகியிருந்த போதிலும், அவரது சிந்தனை ஆலயத்திருப்பணி மிக விரைவாக முற்றுப்பெற வேண்டுமென்பதாகவேயிருந்தது. அவர் சபையின் மலாயாக்கிளைக்கு எழுதிய கடிதங்களில், தாய்க்கிளையின வருடாந்தக் கூட்டத்தில் அனுமதி பெற்று கௌரியம்பாள் விமான வேலைகளைப் பொறுப்பேற்றுக் காலதாமதமின்றிச் செய்து முடிக்குமாறு வற்புறுத்தி வந்தார். இறுதி வரை அவரது சிந்தனை முழுவதும் கோவில் திருப்பணி விரைவில் நிறைவேறவேண்டுமென்பதாகவேயிருந்தது.

(அடுத்த இதழில் தொடரும்)

## சைவநெறி — தரம் 11
### (பக்கம் 12இல் தரப்பட்ட வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 11. 3 | 21. 1 | 31. 1 |
| 2. 1 | 12. 2 | 22. 3 | 32. 3 |
| 3. 3 | 13. 3 | 23. 1 | 33. 1 |
| 4. 2 | 14. 1 | 24. 2 | 34. 4 |
| 5. 4 | 15. 1 | 25. 3 | 35. 2 |
| 6. 2 | 16. 2 | 26. 3 | 36. 3 |
| 7. 1 | 17. 3 | 27. 4 | 37. 2 |
| 8. 1 | 18. 2 | 28. 2 | 38. 1 |
| 9. 2 | 19. 4 | 29. 1 | 39. 4 |
| 10. 2 | 20. 1 | 30. 2 | 40. 2 |

# The Heritage of the Tamils : Saivaism - V

— *Kalakeerthi* Prof. Pon. Poologasingham, D. Phil. (Oxon) —

(Continued from Book 112 No. 10)

The corner stone of Saiva Siddhanta is the relationship of the trinity - God, soul and matter (Pathi, Pasu, Pasam). These three entities are held to be primordial and permanent in nature constituting reality. However, they are not equal in status to each other due to their natural qualities. God is inherently knowledgeable without initiation; soul becomes knowledgeable under initiation and stays dormant when not initiated; matter will be dormant even if initiated. Though they are separate entities they are connected. But one cannot become the other because they are three different entities in substance. However, God's presence is there everywhere, as one with rest, different from the rest, and alongside the rest. It is an essential requirement in Saivaism to believe that the ultimate supreme God is Lord Siva.

The gracious God calls the souls living in the unconscious state wrapped up by the veil of bondage (anava) to creation by giving them body(thanu),sense organs(karanam), world (puvanam) and enjoyment (pokam) out of the **maya** and urges them to action - service (chariyai),rituals and rites (kiriyai), learning (Gnanam) and meditation (Yoga) to work out their **karmas**. Thus creation (Akkal) in Saiva Siddhanta is not bringing the world into existence out of nothing. It is a form of evolution out of maya. The soul reincarnates until all karmas are resolved to enjoy to leave liberation (moksa).

Pride (anava) of the **mala** doesn't completely leave the soul. Therefore in liberation (moksa) it remains like the hush in paddy without power. Therefore the soul cannot be one with God in heaven. In liberation the soul becomes linked with God but not one with God. The soul enjoys liberation or heavenly bliss at the feet of the supreme God.

Unlike the Saiva Siddhanta, the monism of Sankarar holds that everything that constitutes the universe is God (**brahman**) and that there is no second thing but God (brahman). Every soul was considered as nothing but brahman. It has been explained that like the sun's reflections in the waters of different pots does't mean that there are different suns so also when brahman takes different bodies it doesn't mean there are different brahmans. This leads to expressions like the following,

**"I am God, I am God. I am no different from God I am the infinite Supreme, the One Reality"** which have become popular among unsuspecting devotees.

Although the two - God and Soul - are identified as one by their union,the monists don't accept that they are two different objects- God and Soul. It seems that the monists labour under a misconception that God being absolute there could be no object but God. They do not realise that if all the objects seen in the universe are God it would not be possible to account for the imperfections and the consequent woes and throes that are abundantly found therein.

Also, if there is nothing else but God, it is questionable from what the souls and matter was created. Anything cannot arise from nothing. Then God should have created them from himself. If so, the defects normally seen in souls and matter should also be there in God.

The existance of God is absolute because it is not conditioned by any other existence. He is not handicapped by any other object.

The theory of absoultism of the monists forced into being the theory of illusion (maya). Mayavadins (Sankarar School) have entirely mistaken and misused maya. Maya explains the transitory nature of worldly pleasures and their illusive character in deceiving the souls. There cannot be an illusion without an object to be deluded.

The Sankara School of Vedanta opts for knowledge to achieve salvation, which to them is the destruction of illiteracy But it limits the people who are entitled to obtain knowledge to the Brahmin fold which has been endowed with the prerogative of studying and hearing the Vedas. It is surprising how the Smartas can stifle the Saivaities into accepting their Smartism when it has no salvation for them.

Saivaism inspite of a very rich religious literature and highly logical philosophical expositions has become endangered due to many factors some of which are highly vicious while others are due to ignorance. Instead of moaning their plight the Savaities should examine the causes and redeem their religion which is the foundation of their culture and civilisation.

The failure of the Saivaites to get a basic knowledge of the fundamentals of their religion has contributed very much to this abominable situation. A lack of attachment to their religion could also have intensified their predicament. Proselytism hasn't been a major objective in Saivaism.Saivaism smacks of fundamentalism. As such it had been very easy for the so-called uniting forces to make heavy inroads which had the ill effects of obliterating the fundamentals of Saivaism. "All religions are acceptable", "There is only one God and only one Deva", "Everything is brahman"(em-mathamum sammatham, Onre kadavul oruvane devan, ellam Brahman) are catchy phrases which have confused the unsuspecting to follow other religionists, pray other deities and follow duping Swamis.

(Concluded)

Edited - & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna. 27-02-2002 (Fullmoon Day).